மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சென்னை மாநகரக் காய்கறி வளர்ச்சி சங்கத்தின் மூலமாக இது நடைபெற்று வருகிறது. இங்கே வேளாண்மை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அணுகுவார்களானால், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know the total amount set apart in 1972–73 for this incentive scheme?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, 1971–72ம் ஆண்டு முடிய இருக்கிறது. 1972–73ம் ஆண்டிற்கு இன்னும் முடிவு பெறவில்லை. 1971–72க்கு பழைய தோட்டங்களைப் பேணிக் காப்பதில் 3,003 தோட்டங்களும் புதிய தோட்டங்கள் என்ற அளவில் 1,169 தோட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, சென்னை நகரத்திலே புதிதாகக் கொடுக்கப்பட்ட உதவிகளைப் பெற்ற வீடுகள் சென்ற ஆண்டு எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மொத்தம் 4,172.

*Dry Farming Project at Dharmapuri.*

† 109 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government for the formation of a Dry Farming Project at Dharmapuri and

(*b*) if so, the details thereof?

புன்செய்ப் பண்ணைத் திட்டம், தருமபுரி.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரியில் புன்செய்ப் பண்ணைத் திட்டம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்புக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

† Postponed from the List of questions for 8th December 1972.

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) தருமபுரி மாவட்டத்தில் மண்வள ஆய்வு வேலை நடைபெற்று வருகிறது. இப்பணி முடிக்கப்பட்டதும், புன்செய் நில மேம்பாட்டுச் சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கும் பணியை சிறப்புப் பணியாளர்களிடம் ஒப்படைத்து அவற்றைத் தயாரிக்க வேண்டும்.

*Sugarcane Price.*

@ 110 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the North Arcot Co-operative Sugar Factory has demanded higher price for sugarcane during 1972-73 ; and

(*b*) if so, the decision taken thereon by the Government?

கரும்பு விலை.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்புக்கு 1972-73ம் ஆண்டுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தற்போது கரும்பு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக் கூடிய விலை கட்டி வரவில்லை என்ற கோரிக்கை பரவலாக இருந்து வருகிறது. சர்க்கரை ஆலை நிர்வாகிகளும் தலைவர்களும் விவசாயிகளுக்குக் கரும்பு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அது வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இல்லையென்றால், அதுபற்றிப் பரிசீலிக்க அரசு ஆவன செய்யுமா என்று தெரிவிக்கவிரும்புகிறேன்.

@ Postponed from the List of questions for 8th December 1972.